மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மொத்தம் 12 கடைகள் ஸ்ரீரங்கத்தில் ஒரு இடத்தில் கட்டப்பட்டது. அந்த இடம் சரியாக இல்லை என்ற காரணத்தால் திருவானைக்காவல் சன்னதி தெருவுக்கு 11 கடைகளும், காந்தி ரோட்டுக்கு ஒரு கடையும் மாற்றப்பட்டது. அங்கும் பர்மா அகதிகள் வராததால் அந்த ஊர்க்காரர்களுக்கு ஒரு வருஷத்திற்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: பர்மா அகதிகளுக்கான கடைகளைக் கட்டிக் கொடுக்கும்போது முக்கியமான இடங்களில் கட்டிக் கொடுத்தால்தான் வியாபாரம் நடக்கும். சென்னை நகரிலும் அவர்களுடைய கடைகளுக்குப் பாதுகாப்பான ஏற்பாடு செய்ய வேண்டும். சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற முக்கிய நகரங்களில் எல்லாம் பஜார்களில் அவர்களுக்கான கடைகளைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அங்கத்தினர் சொன்னது போல் நிரம்ப இதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. எடுக்கப்பட்ட முயற்சிகளிலேயே பர்மா அகதிகள் முழுவதும் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் தற்போதைய நிலை.

Provident Fund for labourers

* 659 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the benefits of provident fund contribution are to be extended to all industrial employees in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) 1969-ம் ஆண்டு தமிழ் நாடு அரசுத் தொழில் நிறுவனங்கள் பணியாளர் (உதவித் தொகையுடன் கூடிய) வருங்கால வைப்பு நிதி விதிகள் நிதித்துறையில் 26—12—1969 அன்று வெளியான 1883-ஆம் அரசு ஆணையில் வெளியிடப்பட்டன. அந்த விதிகள் 1952-ஆம் ஆண்டு ஊழியர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தக்கூடிய தமிழ் நாடு அரசு தொழில் நிறுவனங்களின் ஊழியர்கள் அனைவருக்கும் பயன் படுத்தப்படும் என்றும், சட்டப்படிக்கான பணி விதிகளால் முறைப்படுத்தப்பட்டு ஓய்வூதியம் பெறத்தக்க பணியைச் சேர்ந்தவர்கள் இந்த விதிகளின் கீழ் வரமாட்டார்கள் என்றும் அந்த அரசு ஆணையில் ஆணையிடப்பட்டிருந்தது. இந்த விதிகள் 18—5—1958 அன்று செயலுக்கு வந்துள்ளன.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவரவர்களே, தொழிலாளர்கள் பிராவிடெண்ட் பண்டிலிருந்து லோன்கள் பெறுவதற்கு விதிகள் மிகவும் கட்டுப்பட்டிருப்பதால், கல்யாணத்திற்கும், படிப்பிற்கும்தான் என்றிருந்தது, அவர்களுக்(மற்றவை

களுக்குக் கடன் கொடுக்காததால் அந்த ரூலே நெகிழ்த்தித் தொழிலாளர்களுக்குக் கடன் கொடுக்கும்படியாக வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: எந்தெந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்தந்த நடவடிக்கை களெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன.

DR. H. V. HANDE : What is the extra commitment for the Government under this head? Are the Government going to implement this from the present financial year May I know whether grants have been made in the present budget for this item?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : This has come into effect from 18th May 1958. It has retrospective effect. As for the amount involved, I want notice.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி, 20-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் மட்டும்தான் அமுல்படுத்துகிறது அதை மற்றத் தொழிலாளர்களுக்கும் அமல்படுத்த மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதனுடைய விளைவுகளை யோசித்து வற்புறுத்தப்பட வேண்டிய அம்சம்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், பேக்டரிகளிலேயும், மற்றைய அலுவலகங்களிலும் தொழிலாளர்களாகக் கருதி உதவி செய்யப் படுகிறது. அதே நோக்கில் சர்க்காரில் ஊழியம் செய்து தொழிலாளர்களாகவோ அல்லது என்.ஜி.ஓ.-க்களாகவோ சேராது **Nation'l Malari Eradica'ion Programme** -இல் கிட்டத்தட்ட 5,000 பேர்கள், 15 வருஷங்களாகச் சர்வீஸ் செய்தும்கூட தினக் கூலிகளாகக் கருதப்படுகிறார்கள். அவர்களும் தொழிலாளர் வர்க்கத்தில் சேர்க்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக் கேள்வி போடவும்.

கொப்பனப்பட்டியில் வீட்டு மனைகள் ஒப்படை.

*** 660 வின—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள கொப்பனப்பட்டியில் முஸ்லீம்கள் வாழும் பகுதியில், மனைக்கட்டு இடங்கள் அவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.